# குரு பூர்ணிமா

மூலம்
ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி

தமிழாக்கம்
ஸ்வாமி குஹாத்மானந்த ஸரஸ்வதி

Reg No : 87/2014 BKIV
ARSHA VIDYA VILASAM FOUNDATION
Trichy

AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின் – திருக்குறள்

என்று இவ்வுலகில் பல்வேறு விதமான நூல்களையும் கலைகளையும் பயின்று தெளிந்த போதிலும் இருவினைகளற்ற, வேண்டுதல் வேண்டாமைகளற்ற், தனக்குவமையில்லாத வாலறிவனின் அதாவது நம் இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட அனைத்திற்கும் ஆதாரமான ஞான வடிவமான இறைவனின் ( ஈஸ்வரனின் ) திருவடிகளை அறிந்து, உணர்ந்து, தெளிந்து தொழாதவராயின் அவற்றினால் ப்ரயோஜனமில்லை என்பது இக்குறளின் தெளிந்த முடிவு. ஆக அப்பேற்பட்ட நமது மனம், இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட இறை வஸ்தூவை ( யதோ வாசோ நிவர்த்தந்தே...) நமது அளவுக்குட்பட்ட சிறு புத்தியின் மூலமாக அறிதல் என்பது சாத்யமற்ற தொரு விஷயமாக தென்படுகிறது. என்றாலும் தகுந்த மனபாங்குடனும், நம்பிக்கையுடனும் ( ச்ரத்தை ) அந்த இறை சொரூபத்தையே சார்ந்து வழிபடின் அதாவது,

" அவனருளாலே அவன்தான் வணங்கிடின் "

இறைவனே நமக்கோர் குருவாக நம்முன் தோன்றுவார் என்பது ஆன்றோரின் அனுபவம். இதையே தாயுமான ஸ்வாமிகளும்

மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.
– தாயுமானவர் பாடல்கள்

என்று மொழிகின்றனர். அப்படி ஓர் சற்குரு வாய்ப்பது மஹா புருஷ ஸம்ஸரயம். அனந்தகோடி ஜன்மங்களில் நம்மால் செய்யப்பட்ட புண்ய பலன் என்று விவேக சூடாமணியில் பகவான் ஸ்ரீ ஆதிஸ்ங்கரரும் தெள்ளென வலியுறுத்திகின்றார்.

துர்லபம் த்ரயமேவைத்த் தேவானுக்ரஹ ஹேதுனம்!
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ச்ரய :
– விவேக சூடாமணி

அப்படி நமது புண்யபலனினாலும் திருவருளாலும் கிடைக்கப் பெற்ற குருவை பணிந்து பணிவிடை புரிந்து வேதங்களின் உட் பொருளாகிய ப்ரஹ்மவித்யாவை பெறுவதே பெரும்பேறு ஆகும்.

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வதர்ஶிந:
– பகவத் கீதா



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

என்ற விதத்தில் இறைவனை உணர்ந்து தெளிவதே வீடுபேறாகும். அப்பேற்றையடைந்த மாந்தருக்கு குருவருளே திருவருள் என்பது ஐயம். திருபு அற விளங்கும் என்பது திருமூலர் வாக்கு.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே. – திருமந்திரம்

இப்படி நமக்கு பேரருள்புரிந்த குருவுக்கு முன்னிற்கும் எண்ணற்ற குருமார்களின் பரம்பரையை பின்நோக்குவோமெனின் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியே ஆதிகுரு என்று அறியப்படுகிறார். இப்படி சதாசிவனில் தொடங்கி வ்யாசர், ஆதிஸங்கரர் வழியாக நமக்கருள் செய்த குரு வரையில் வந்த இந்த குருபரம்பரையை சிறப்பிக்கும் விதமாக ஒவ்வொரு வருடமும் குருபூர்ணிமா எனக் குறிப்பிடப்படும் இப்பூஜையானது ஆஷாட (ஆடி) பௌர்ணமி அன்று மிகவும் ச்ரத்தையுடன் காலம் காலமாக நம் முன்னோர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நமக்கு புரியும் படி கூறுவோமெனில், தற்காலத்தில் பெற்றோர்களுக்கு நன்றி செலுத்தும்விதமாக கொண்டாடப்படும் ஃபாதர்ஸ்டே மற்றும் மதர்ஸ் டே போன்று நமது குருமார் –களுக்கும், ரிஷிகளுக்கும் நமது நன்றிகளையும், ச்ரத்தா பக்தியையும் காணிக்கையாக்கும் சிறப்பு நிகழ்வாகும்.

பாதராயணர் என்று குறிப்பிடப்படும் வேதவ்யாசர், (அவருக்கும் குருமார்கள் இருப்பினும் ) நமக்குத் தெரிந்த மற்றும் தெரியாத ரிஷிகள் மற்றும் குருமார்களுக்கு ஒரு இணைப்புப் பாலமாக அறியப் –படுகிறார். ஆகவே இக் குருபூர்ணிமாவானது வ்யாஸ பூர்ணிமா என்றும் அழைக்கப்படுகிறது.

**சாதுர்மாஸ்ய வ்ரதம்:**

பண்டைய காலங்களில் வர்ணாஷ்ரம தர்மங்களானது சரியான புரிந்துக் கொள்ளலுடன் மக்கள் அனைவராலும் கடைபிடிக்கப் பட்டன. நமது பாரத நாட்டின் உயர்ந்த பக்குவ நிலையான ஸந்யாஸ தர்மமானது அதி உந்நதமான முறையில் மேற் கொள்ளப்பட்டது. மற்ற ஆஷ்ரம தர்மங்களும் மிகவும் உயரிய மனப்பாங்கில் கடைபிடிக்கப்பட்டன.ஸாதாரணமாக ஸந்யாஸிகள் பரிவ்ராஜக முறையில் ஓர் இடத்தில் நிரந்தரமாக நில்லாமல் பிராயணித்துக் கொண்டே இருப்பர். அவர்கள் செல்லுகின்ற ஒவ்வோர் ஊரிலும் மன்னனும், மக்களும் அவர்களுக்கு உரிய முறையில் ஏற்பாடுகள் செய்துகொடுப்பதை பாக்யமாக கருதினர்.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

இக் குரு பூர்ணிமா நன்னாளானது ஆடி மாத்தின் மழை காலத்தில் தொடக்கத்தில் வருகிறபடியால் ஸந்யாசிகள் சாதுர்மாஸ்ய வ்ரதம் என்று குறிப்பிடப்படுகின்ற உன்னதமான வ்ரதத்தை மேற்கொள்கின்றனர். இங்கு மாஸம் எனப்படுவது "பக்ஷோவை மாஸ:" இதி என்கின்ற கோட்பாட்டின் படி 15 நாட்களைக் கொண்ட ஒரு பக்ஷமாகக் கொள்ளப்படுகிறது. ஆக சாதுர்மாஸ்யம் என்பது நான்கு பக்ஷங்களைக் கொண்ட இரண்டு மாதங்கள் என்றாகின்றது.

மனித வாழ்வில் பரமோத்தம புருஷார்த்தம் என்கின்ற மோக்ஷத்திற்கு சாக்ஷாத் ஹேதுவாகின் ஸன்யாஸ தர்மமானது மேற்கொள்ளப்படும் போது "அஹிம்ஸா பரமோ தர்ம:", என்கின்ற மஹத்துவம் வாய்ந்த உயிர்களுக்கு தீங்கிழையாமை என்கின்ற தர்மமானது பிரதிஜநா (சத்யம்) வானது சிரமேற்கொள்ளப் படுகிறது. அதன்படி மழைகாலத்தில்,பிராயாணமானது வழி தடங்களில் பல உயிர்களுக்கு ஊறு விளைவிப்பதாக அமைய கூடும் என்பதனால் ஸன்யாசி பெருமக்கள் இவ்விரண்டு மாதங்களுக்கு ஓர் இடத்தில் தங்குவதற்கு ஸங்கல்பிக்கின்றனர். பொதுவாக அப்படி ஸங்கல்பிக்கின்ற ( தேர்ந்து எடுக்கப்படும் ) இடமானது இரு நதிகளின் நடுவிலோ அல்லது பெருநதி மற்றும் ஓடைகளுக்கு நடுவிலோ அமைந்த ஊராக அல்லது நகரமாக இருக்கும். இவ்விரு மாதங்களில் அங்கிருக்கும் நதிகளை கடக்காமல் இருப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களின் ஸங்கல்பமானது ஈஸ்வர ஸங்கல்பமாக ( புண்ய பலனாக) அவ்விடங்களில் வாழ்மக்களுக்கு அமைகின்றது. அவர்களும் தகுந்த மனோ பாவத்துடன் ஸன்யாஸி பெரு மக்களை அணுகி அவர்களுக்கு வேண்டியன செய்து கொடுத்து ஆசிகளையும் அருளையும் பெற்றுய்கின்றனர். அவ்விதமான அநுகிரஹங்களுன் பிறவித்தளைகளை வேரறுத்து பேரின்ப நிலையை நமக்களிக்கும் மெய்ஞானமாகிய "வேதாந்தம்" என்கின்ற ப்ரஹ்ம வித்யாவானது தலை சிறந்ததாகும். மஹத்துவம் வாய்ந்த சாதுர்மாஸ்ய வ்ரதம் ஆரம்பிக்கப்படும் இக்குரு பூர்ணிமா நன்னாளில் பரம்பரையாக வந்த அனைத்து குருமார்களையும், ஆசார்யர்களையும், குறிப்பாக மடங்களிலும், வித்யா பீடங்களிலும், ஆஸ்ரமங்களிலும் ஆவாஹனம் ( ஆமந்த்ரணம் ) செய்து வழிபடுவர். மேலும் விரிவாக பார்க்கின் தலை சிறந்த மஹான்களால் நிறுவப்பட்டு வேதம் மற்றும் குரு சிஷ்ய பாரம்பர்யத்தை இடையறாமல் கடைபிடித்து லோக சங்க்ரஹத்தை புரிந்து வரும் தொன்மை வாய்ந்த பல மடாலய -ங்களையும் ஆன்மிக மையங்களையும் பெற்றிருப்பது நமது பாக்யங்களாகும்.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

அவ்வனைத்து மடங்களும் தனக்கே உரித்தான ஒரு குருவையும், மஹான்களின் பரம்பரையையும், சிறப்பான -தொரு நடைமுறை வழக்கங்களையும், அதைப் பின்பற்றக் கூடிய சிஷ்ய பெருமக்களையும் (அநுகாமிந:) கொண்டிருக்கின்றன. என்பது மிகவும் சிறப்பானதொரு அம்ஸமாகும். அம்மடாலயங் -களில் தற்போது குருவாக இருக்கும் பெருமகனார் தனக்கு முன்னோர்களான (குறைந்த பக்ஷம்) பதினாறு குருமார்களை கலசங்களில் ஆவாஹனம் செய்து தினந்தோறும் வேத முறைப் படி வழிபடுவர் என்பது வேத விதிகளுக்குட்பட்ட நடைமுறை வழக்கமாகும்.

**குரு என்பவர் :**

நடைமுறையில் "குரு" என்கின்ற சொல்லிற்கு பலஅர்த்தங்கள் இருக்கின்றன. கற்றுக் கொடுப்பவர் குரு அதேபோல் அறிவுருத்துபவரும் குருவென கொள்ளப்படுகிறார். இன்றைய நாட்களில் ஆங்கிலமொழியிலும் இவ்வார்த்தையானது உபயோகப் படுத்தப்படுகிறது. குறிப்பாக அமெரிக்க நாளிதல்களில் இவர் ஒரு ஸ்டாக் மார்க்கட் குரு இவர் ஒரு ஆட்டோமொபைல் குரு என்று குரு என்கின்ற சொல்லானது அதிகஅளவில் பத்திரிக்கையாளர்களால் பயன்படுத்துவதை காணமுடிகிறது. நம்மூர்களிலும் சிறந்த தற்காப்பு கலைகளில் ஒன்றாகிய சிலம்பம் முதல் பரதம், சங்கீதம் மற்றும் ஓவிய கலை முதலியவைகளை கற்றுக் கொடுப்பவர்களும் குருவாகவே அறியப்படுகின்றனர். அக்கலைகளை கற்கும் பொருட்டு அவர்களை அணுகும் போது முறைப்படி தேங்காய், பூ, பழம் முதலியவைகளை எடுத்துச் செல்லவும் அறிவுறுத்தப்படுகிறது.

இவ்விதமாக பல வடிவங்களில் குரு என்கின்ற சொல்லானது பயன்படுத்தப்பட்ட போதிலும் வேதங்களின் உட்பொருளாகிய மெய் ஞானத்தை உணர்த்துபவருக்கே பொருத்தமாக அமையும். அவரே "உபதேஷ கர்த்ரு"என்று அறியபடுகிறார். அதாவது வேதங்களின் முழுமுதற்ச் சாரமாகிய ஜீவேஸ்வர ஐக்யத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் வாக்யங்கள் "மஹாவாக்யங்கள்" எனப்படுகின்றன. அவைகளின் பொருள்களை நமக்கு உணர்த்துவதன் மூலம் நம்முடைய முக்கியமான தேடுதலாகிய "பூர்ணத்துவம்" ஆனது நம் ஸ்வரூபமே என்று உணர்த்தி நமது பிறவித்தளையை நீக்கி பேரின்ப நிலையை உணர்த்துபவரே "குரு" எனப்படுகிறார். ஆக குரு என்பவர் மஹா வாக்ய உபதேஸகர்த்ரு என்பதே சரியான பொருளாகும்.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

**குருவே ஈஸனாக :**

குரு என்பவர் மனித பிறப்பே ஆயினும் அவரை குறித்த வழிபாடானது (போற்றுதலானது) அவருடைய பூத உடலை குறித்தது அல்ல, என்பதை கீழ்வருகின்ற ஸ்லோகங்களில் நம்மால் உணர முடியும்.

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேஸ்வர:
குருரேவ பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: – குரு ஸ்தோத்ரம்

குருவே படைக்கும் கடவுளாகிய ப்ரஹ்மா, குருவே காக்கும் கடவுளாகிய விஷ்ணு, குருவே அழிக்கும் கடவுளாகிய ஸிவன், குருவே எல்லைகளுக்கு உட்படாத ஆத்ம ஸ்வரூபமான ப்ரஹ்மன் (அப்படிப்பட்ட) குருவிற்கு (என்னுடைய) நமஸ்காரங்கள்.

நமது முன்னோர்களாகிய ரிஷிகளும் முனிவர்களும் "உண்மையின்" உருபொருளை கண்டறிந்த ஞானிகளாகத் திகழ்ந்தனர். நம் மனதிற்கும் புலன்களுக்கும் எட்டாத நாம ரூபங்களற்ற அகண்ட வஸ்துவாகிய உண்மைப் பரம்பொருளை எப்படி வழிபடுவது என்பதனை மிகவும் நேர்த்தியாக, அழகாக, எளிமையாக வேதம் மற்றும் ஆகம முறைப்படி வடிவமைத்துக் கொடுத்துள்ளனர். அதாவது குறிப்பிட்ட நாம ரூபங்களைக் கொண்டு, எங்கும் நீக்கமற நிறைந்துள்ள காலம், இடம் என்ற எல்லைகளுக்குட்படாத பரம்பொருளை வழிபட்டு, அப்பரம் பொருள் உயிரினிக்கு உயிராக இரண்டற கலந்தது என்று உணர்ந்து உய்வதே உருவ வழிபாடு என்கின்ற உன்னதமான வழிபாட்டு முறையாகும்.

உதாரணமாக ஆலயத்திலுள்ள ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியை நாம் வழிபடும் போது நாம் அச்சிலையை வழிபடுவதில்லை மாறாக எங்கும் வ்யாபித்து இருக்கும் ஈஸ்வர தத்துவத்தையே வழிபடுகிறோம் என்பதே உண்மையாகும். இது போலவே விநாயகர், முருகன், அம்மன் என்று பலவிதமான நாம ரூபங்களின் வாயிலாக ஈஸ்வர தத்துவத்தைதான் ஆவாஹனம் செய்து வழிபடுகிறோம்.

அதன்படியே இச்சுலோகத்தில் தனது குரு என்கின்ற நாம ரூபத்தில் ஈஸ்வரதத்துவமானது ஆவாஹனம் செய்யப்படுகிறது. இன்னும் ஆழமாக புரிந்து கொள்ள ஆவாஹனமானதும் அவசியமற்று போய்விடுகிறது. குருவினுடைய போதனையும் அதுவேயாகும். குருவானவர் வேதாந்தத்தைக் கற்பிக்கும்போது நீ நாம ரூபம் முதலிய எல்லைக்கு உட்படாதவன் என்று போதிக்கின்றார். அதற்கு நான் அளவுக்கு உட்பட்டவன் ஆனால் நீ மட்டும் அளவுக்கு உட்படாதவன் என்று அர்த்தமல்ல.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

உண்மையில் நீயும் அளவுக்கு உட்படாதவன் ( எல்லைகளற்றவன் ) அவரும்(குருவும்) அளவுக்கு உட்படாதவர் என்பதே வேதாந்தத்தின் முடிவு. எல்லைகளற்றது என்பது பரம்பொருள் தத்துவம் ஒன்றே, அதுவே சத்யம். ப்ரஹ்மா, விஷ்ணு, ஶிவன் என்னும் வடிவில் இலங்குவதும் அதுவேயாகும்.

அதுமட்டுமல்ல இங்குள்ள அனைத்திலும் உருபொருளாக ( காரணப்பொருளாக ) இலங்கிக் கொண்டு இருப்பதுவும் அந்த அனந்த வஸ்துவாகிய ப்ரஹ்மனேயாகும். ஆகவே நமது ஸ்ரத்தா பக்திக்கு பாத்திரமானவரும் பாடம் புகட்டும் ஆசார்யருமானவரை ப்ரஹ்மாவாக, விஷ்ணுவாக, ருத்ரனாக போற்றி வழிபடும்போது அவ்வழிபாடானது தனி மனிதனான அவரையல்ல அவரால் போதிக்கப்படும் விஷயத்தை குறித்தே அவரால் போதிக்கப்படும் (ப்ரஹ்ம தத்துவம்) விஷயமும் அவரும் வேறானது அல்ல. குருவை போற்றி வழிபடுவதும் பரம் பொருளை போற்றி வழிபடுவதும் ஒன்றேயாகும்.

அகண்டமண்டலாகாரம் வ்யாப்தம் யேந சராசரம்
தத்பதம் தர்ஶிதம் யேந தஸ்மை ஶ்ரீ குரவே நம: – குரு ஸ்தோத்ரம்

எந்த பரவஸ்துவானது அகண்ட பேரண்ட வடிவினதாய் அனைத்து தாவர ஜங்கம உயிரினிலும் வ்யாபித்து உள்ளதோ அறியப்படவேண்டிய, அந்தப் பரம்பொருள் (உள்ளபடி) காண்பித்த அக்குருவிற்கு எனது நமஸ்காரம்.

| | |
|---|---|
| யேந | – எந்த (வஸ்துவானது) |
| அகண்ட மண்டலாகாரம் | – பிளவுறாத பேரண்ட வடிவினதாய் |
| சராசரம் | – ஸ்தாவர ஜங்கமம் என அறியப்படும் அசையும் அசையா உயிர்களனைத்திலும் |
| வ்யாப்தம் | – வ்யாபித்துள்ளதோ |
| தத்பதம் | – அப்படிப்பட்ட பரம்பொருளை |
| தர்ஶிதம் | – நன்கு (எனக்கு) உணர்த்திய |
| தஸ்மை குரவே | – அந்த குருவிற்கு |
| நம: | – நமஸ்காரம் |

**ஞானம் என்னும் அதிசயம்:**

உலகியல் அறிவு (ஞானம்) அல்லது ஆன்மீக அறிவு எதுவாக இருப்பினும் அறிவைப் பெறுவது என்பதே ஒரு மாபெரும் அதிசயம் தான். அறிவை அடையும் விஷயத்தில் மனமானது முக்ய பங்கு வகிக்கிறது. மனதாகப்பட்டது எந்த ஒரு புதிய விஷயத்தையும், உட்கூறுகளையும் எப்படி க்ரஹித்துக் கொள்ள முடிகிறது? அதாவது அறியாமை ( அறிவு அற்ற சூன்யமான நிலை ) என்பது நமது (ஸ்வரூபமாக) இயல்பாக இருப்பின் நம்மால் எதையும் அறிந்துகொள்வது என்பது சாத்யமில்லை என்றாகிவிடும். அதே



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

உண்மையில் நீயும் அளவுக்கு உட்படாதவன் ( எல்லைகளற்றவன் ) அவரும்(குருவும்) அளவுக்கு உட்படாதவர் என்பதே வேதாந்தத்தின் முடிவு. எல்லைகளற்றது என்பது பரம்பொருள் தத்துவம் ஒன்றே, அதுவே சத்யம். ப்ரஹ்மா, விஷ்ணு, ஶிவன் என்னும் வடிவில் இலங்குவதும் அதுவேயாகும்.

அதுமட்டுமல்ல இங்குள்ள அனைத்திலும் உருபொருளாக ( காரணப்பொருளாக ) இலங்கிக் கொண்டு இருப்பதுவும் அந்த அனந்த வஸ்துவாகிய ப்ரஹ்மனேயாகும். ஆகவே நமது ஸ்ரத்தா பக்திக்கு பாத்திரமானவரும் பாடம் புகட்டும் ஆசார்யருமானவரை ப்ரஹ்மாவாக, விஷ்ணுவாக, ருத்ரனாக போற்றி வழிபடும்போது அவ்வழிபாடானது தனி மனிதனான அவரையல்ல அவரால் போதிக்கப்படும் விஷயத்தை குறித்தே அவரால் போதிக்கப்படும் (ப்ரஹ்ம தத்துவம்) விஷயமும் அவரும் வேறானது அல்ல. குருவை போற்றி வழிபடுவதும் பரம் பொருளை போற்றி வழிபடுவதும் ஒன்றேயாகும்.

அகண்டமண்டலாகாரம் வ்யாப்தம் யேந சராசரம்
தத்பதம் தர்ஶிதம் யேந தஸ்மை ஶ்ரீ குரவே நம: – குரு ஸ்தோத்ரம்

எந்த பரவஸ்துவானது அகண்ட பேரண்ட வடிவினதாய் அனைத்து தாவர ஜங்கம உயிரினிலும் வ்யாபித்து உள்ளதோ அறியப்படவேண்டிய, அந்தப் பரம்பொருள் (உள்ளபடி) காண்பித்த அக்குருவிற்கு எனது நமஸ்காரம்.

| | |
|---|---|
| யேந | – எந்த (வஸ்துவானது) |
| அகண்ட மண்டலாகாரம் | – பிளவுறாத பேரண்ட வடிவினதாய் |
| சராசரம் | – ஸ்தாவர ஜங்கமம் என அறியப்படும் அசையும் அசையா உயிர்களனைத்திலும் |
| வ்யாப்தம் | – வ்யாபித்துள்ளதோ |
| தத்பதம் | – அப்படிப்பட்ட பரம்பொருளை |
| தர்ஶிதம் | – நன்கு (எனக்கு) உணர்த்திய |
| தஸ்மை குரவே | – அந்த குருவிற்கு |
| நம: | – நமஸ்காரம் |

**ஞானம் என்னும் அதிசயம்:**

உலகியல் அறிவு (ஞானம்) அல்லது ஆன்மீக அறிவு எதுவாக இருப்பினும் அறிவைப் பெறுவது என்பதே ஒரு மாபெரும் அதிசயம் தான். அறிவை அடையும் விஷயத்தில் மனமானது முக்ய பங்கு வகிக்கிறது. மனதாகப்பட்டது எந்த ஒரு புதிய விஷயத்தையும், உட்கூறுகளையும் எப்படி க்ரஹித்துக் கொள்ள முடிகிறது? அதாவது அறியாமை ( அறிவு அற்ற சூன்யமான நிலை ) என்பது நமது (ஸ்வரூபமாக) இயல்பாக இருப்பின் நம்மால் எதையும் அறிந்துகொள்வது என்பது சாத்யமில்லை என்றாகிவிடும். அதே



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

போல் அறிவானது நமது உண்மையான இயல்பு (ஸ்வரூபம்) எனில் (புதிதாக) அறிவதன் அதாவது கற்பதன் தேவை இருக்காது. உண்மையானது என்னவெனில் அனைத்து ஞானங்களும் (அறிவு) நம்மில் புதைந்துள்ளன. அதாவது நாம் அனைத்து ஞானங்களின் ஸ்வரூபம். இவ்வுண்மையானது அறியாமல் இருக்கும்பொழுது கற்றலும் கற்பித்தலும் சாத்யமாகிறது. இறுதியாக கற்றல் அல்லது கற்பித்தல் என்பது அறியாமையை சிறிது சிறிதாக நீக்குவது தான் என்றாகிறது. ஆனால் நமது புரிந்துக் கொள்ளலோ கற்றல் என்பதன் மூலம் அறிவை சிறிது சிறிதாக கூட்டுகிறோம் என உணரவைக்கிறது.

எனவே ஆசார்யர் எனப் படுபவர் அறிவை வழங்குபவர் என்பதைவிட அக்ஞானத்தை சிறிது சிறிதாக அகற்றுபவர் என்பது தான் உண்மை. அதாவது சரியான யுக்திகளை கையாண்டு நமது அனுபவத்தையும் ஓர்ந்து நமக்குள் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்தி அறிவு என்னும் பெயரால் அக்ஞானத்தை அகற்றுகின்றார். ஆக அறிவானது ஏற்கனவே நம்முள் நாமாக (நம் ஸ்வரூபமாக) இருக்கின்றது.

**நாமும் கடவுளும்**

பொதுவாக ஈஸ்வரனை ஞான ஸ்வரூபி என்றும் அனைத்து ஞானங்களுக்கும் இருப்பிடம் என்றும் கூறுகிறோம். யார் அந்த ஈஸ்வரன்? ஒருக்கால் அக்கடவுள் நான் தான் அது என்று கூறினால், அவரால் குறிப்பிடப்படும் நான் என்பதன் பொருளுக்கும் நம்மால் பயன்படுத்தப்படும் நான் என்பதன் பொருளுக்கும் எந்தஒரு பேதமுமில்லை என்பதே உண்மையாகும். அதாவது ஈஸ்வரனால் கூறப்படும் நான் என்பதும் என்னால் கூறப்படும் நான் என்பதும் ஒன்றேயாகும். இரண்டுமே உணர்வு (ஞான) ஸ்வரூபமாகிய சைதன்ய்ததை ( Consciousness) குறிக்கின்றது. வேதாந்த ஸாஸ்த்ரமாது சைதன்யமானது அளவிற்குட்படாதது (எல்லைகளற்றது) என்றும் வடிவங்களற்ற ஒன்றேயானது என்றும் பறை சாற்றுகின்றன.

வடிவங்களற்றது என்பதனால் அது அளவிற்கு உட்படுத்த முடியாததாகிறது. எனவே கடவுள் சைதன்ய வஸ்துவெனில் நான் என்று என்னால் குறிப்பிடப்படுவதும் அந்த சைதன்யமும் யாகும். உடலளவிலும் மனதளவிலும் நான் அளவிற்குட் பட்டவனாகத் தோன்றிய போதிலும் சைதன்ய வஸ்துவாக, நான் அளவிற்குட்படாதவன் என்பது மாபெரும் உண்மையாகும். ஆகவே என்னால் நான் என்று குறிப்பிடப்படும் சைதன்யமும் கடவுளால் நான் என்று குறிப்பிடப்படும் சைதன்யமும்



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

ஒன்றேயாகும். சைதன்யம் என்பதுவே அறிவு எனவும் ஞானம் எனவும் கூறப்படுகிறது. இறுதியில் கடவுள் என்பவர் ஞான ஸ்வரூபி, அனைத்து ஞானங்களுக்கும் இருப்பிடமானவர் எனின் என்னால் சைதன்யமாக உணரப்படும் நான் என்பதுவும் அதுவேயாகும்.

**அறிதலென்பது அறியாமையின் காரணியை நீக்குவதாகிறது**

அனைத்து ஞானங்களும் என்னில் இருக்கின்றனவெனில் அதை என்னால் ஏன் அறிய முடியவில்லை? ஜீவனை ( தனி மனிதனை ) பொருத்தமட்டில் ஞானமானது மறைக்கப்பட்டுள்ளது எனவும் ஈஸ்வரனை பொருத்தமட்டில் அவருக்கு அது மறைக்கப் படவில்லை என்று கூறப்படுகிறது.

நம்மிடமிருக்கும் ஞானத்தை மூடி மறைக்கும் தன்மை -யானது ஆவரணசக்தி என்று கூறப்படுகிறது. இந்த ஆவரணமானது நம்முள் நாம் ஞானம் ஏற்படுவதற்கான பக்குவமான சூழ்நிலையை உண்டாக்கும் போது தானாக நீங்கி விடுகிறது. மறைப்பானது நீங்குவதே அறிவதற்கு ( ஞானமானது ஒளிர்வதற்கு ) காரணமாகிறது.

ஆங்கிலத்தில் " Discovery " என்னும் வார்த்தையானது இதற்கு மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது. "discovery" என்ற சொல்லானது சாதாரணமாக " புதிதாக கண்டிபிடித்தல் " என பொருள்படுகிறது. "dis-cover"எனப்பிரித்து பொருள் கொள்வோமெனில் cover என்பது மறைப்பு அதாவது "ஆவரணம்" என்றும் disc-dispelling என்பது அதை நீக்குவது என்று பொருள் கொள்வது, நமக்கு மிகப் பொருத்தமாக -விருக்கும், இப்பொருளின் அடிப்படையில் தான் இவ் வார்த்தையானது வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆக ஞானமானது (அறிவானது) ஏற்கனவே நம்முள்இருப்பது, தேவையென்னவெனில் மறைப்பானது (cover) நீக்கப்பட வேண்டும் அவ்வளவே.

இவ்வுலகிலுள்ள சாதாரணமான சமையல் ஞானத்திலிருந்து ( உப்புமா எப்படி செய்வது ) அறிவியல ரீதியான விஞ்ஞானம் ( quantum object ) வரையிலான அனைத்துவித ஞானங்களும் கடவுளிடமிருந்தே தோன்றுகின்றன. எந்த வடிவமான ஞானமாக இருப்பினும் கடவுள் என்னும் ஞானகளஞ்சியத்தில் அடக்கமாகும்.

நம்மிடம் ஏற்கனவே இருக்கின்ற பார்வையை, மறைக்கும் கண்புரையை மருத்துவராகப்பட்டவர் நீக்கும் போது எப்படி நாம் உலகைப் பார்க்க முடியுமோ, அது போல் நம் ஸ்வரூபத்தை மறைத்திருக்கும் ஆவரணமானது குருவினுடைய முறையான



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

போதனையின் (ச்ரவணம், நநம் முதலிய) மூலம் தானாக நீங்கி நாம் யார் என்னும் உண்மையையும், உலகம் என்பதன் உண்மையையும் அறியச் செய்கிறது.

எம்மை வினையை இறையை எம்பால் காட்டாத
அம்மை திரோதை அகலுநாள் எந்நாளோ. - தாயுமானவர்

இங்கு அம்மை திரோதை என்பது ஆவரண சக்தியைக் குறிக்கின்றது.பார்வையின்மை அதாவது குருட்டு தன்மையானது 2 வகைப்படும். சிகிச்சை அளிக்க முடியாதது மற்றும் சிகிச்சை அளிக்க முடிவது. ஞானத்தை பெறுதல் (அறிதல்) என்கின்ற விஷயத்தை விளக்கும் பொருட்டு இரண்டாவது வகைப்பட்ட குருட்டுதன்மையானது இங்கு உதாரணமாக வரும் ச்லோகத்தில் கொடுக்கப்படுகிறது.

அஜ்ஞானதிமிராந்தஸ்ய ஜ்ஞாநாஞ்ஜந சலாகயா
சக்ஷுருந்மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம:

ஞானம் என்கின்ற அஞ்ஞானத்தின் மூலம் அறியாமை ( அஞ்ஞானம் )யினால் ஏற்பட்ட குருட்டுதன்மையினை நீக்கி (பார்வையை மீடுக்கொடுத்த) கண்களைத் திறந்த அந்த குருவுக்கு நமஸ்காரம்.

இச் சுலோகமானது கண் புரையினால் பார்வையிழந்த குருடனான மனிதனை உதாரணமாகக் கூறுகிறது. திமிர: என்றால் கண்புரை, அதனால் பார்வை இழந்தவன் திமிர அந்த: எனப்டுகிறான். இக்குறையை அறுவை சிகிச்சை நிபுணரால்தான் நீக்க முடியும். ஆனால் இந்த ச்லோகமானது இயற்றப்பட்ட காலங்களில் இச்சிகிச்சைக்கென ஒருவகைப்பட்ட மை அல்லது களிம்பானது இருந்திருப்பதாகத் தெரிகிறது. அஞ்ஜநம் என்றால் களிம்பு அல்லது மை என்று பொருள் அதைத் தடவுவதன் மூலம் அஞ்ஜந சலாகயா, கண்புரை என்னும் பிரச்சனையானது தீர்க்கப்பட்டது.

அதுபோலவே நாம் அனைத்து அறிவுகளுக்கும் (ஞானங்களுக்கும்) களஞ்சியமாகவும், ஞானமே ஸ்வரூபவமாகவும் இருந்த போதிலும் அக்ஞானம் என்கின்ற கண்புரைக்கு நிகரான மறைப்பினால் குருடர்கள் போலவே ஆகிவிடுகிறோம்.குருடர்கள் அஜ்ஞானமேவ திமிரம் தேந திமிரேந அந்த: பவதி.

இங்கு திமிரம் எனப்படுவது அக்ஞானமே அதனால் மனிதர்கள் குருடர்களுக்கு நிகராகி விடுகிறார்கள். ஏனெனில் அதுவே நமது ஞானத்தை மறைக்கின்றது.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

ஆகவே, யேந – யாரால், சக்ஷு: – ஞானம் எனும் கண்களானது, உன்மீலிதம் (மறைப்பை நீக்குவதன் மூலம்) திறக்கப் பட்டதோ, தஸ்மை – (அப்படிபட்ட) அந்த, குரவே – குருவிற்கு, நம: – நமஸ்காரம்..

ஆகவே குரு எனப்படுபவர் நம்முடைய ஆவரணம் எனக் கூறப்படும் மறைப்பை நீக்குகின்றாரேயன்றி புதிதாக ஒன்றையும் (ஞானத்தை) கொடுப்பதில்லை. ஆனாலும் இப் பணியானது உண்மையை ஓர்ந்து உணர்ந்து, அதனை ஐயம்திரிபுஅற கற்பிக்கும் முறைகளையும் நன்குணர்ந்த ஒருவரால் மட்டுமே முடியும் என்பது நிதர்சனமான உண்மையாகும். அப்படியில்லையாயின், உண்மையை ஓர்ந்து உணர்ந்து, அதனை ஐயம்திரிபுஅற கற்பிக்கும் முறைகளையும் நன்குணர்ந்த ஒருவரால் மட்டுமே முடியும் என்பது நிதர்னமான உண்மையாகும். அப்படியில்லையாயின், உண்மையை உள்ளபடி உணராத ஒருவரால் அடுத்தவர்களிடம் தனது வார்த்தைகளால் பெருங்குழப்பத்தைத்தான் உண்டு பண்ண முடியும்.

ஒரு வேதாந்த நூலில் குரு எனப்படுபவர் சாதாரண ஒரு மனிதராகப்பட்டவர் கொண்டிருக்கும் தயை, கருணையைவிட அதிக அளவு தயை, அதாவது கருணையைக் கொண்டிருக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. சாதாரணமாக உடல் நலக் குறைவு, பொருளாதார ப்ரச்சனை, வேலையில் ஏதோ பிரச்சனை, என்கின்ற பல்வேறு விதமான காரணங்களினால் துன்பத்திலும் வேதனையிலும் துடிப்பவர்களை காணும் போது நம்மாலான உதவிகளை அவர்களுக்கு செய்ய வேண்டும் என்கிற பரிதாபம் கலந்த இரக்கமும், கருணையும் நம்மில் பெரும்பாலானவர்க்கு வருவது இயற்கையே. அதிலும் பலர் யோசிக்கும் வேளையில் உடனே இறங்கி உதவி புரிவதுமுண்டு.

ஆனால், எந்தவித முக்கிய காரணமுமின்றி ஒருவர் துன்ப -மாகவும் வேதனையாகவும் திரிவாரெனில் அவர் பால் மற்றவர்க்கு இரக்கமானதும் கருணையும் வருவதென்பது மிகவும் கடினமானதே. மேலும் உதவி புரிய வேண்டும் என்ற தூண்டுதலும் அரிதாகிவிடுகிறது.

ஒருவர் எவ்வித காரணமுமின்றி துன்பப்படுவதைக் கண்டு அவரை உதாசீனப்படுத்தாமல் காரணமின்றி அனுபவிக்கப்படும் துன்பமும் துன்பமே என்றும் அவருக்கும் உதவியானது தேவை என்பதையும் அறிந்து உதவி செய்ய முன்வருவதற்கு, அசாதாரணமான கருணையும் பேரிரக்குமும் தயையும் ஒருவருக்குத் தேவைப்படுகிறது.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

உதாரணத்திற்கு, ஒருவரை உண்மையில் பாம்பானது தீண்டிவிடின் உடனே அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று விஷமுறிவு ஊசியின் மூலம் சிகிச்சைக்கான ஏற்பாடுகளைச் செய்வோம். அப்படி இல்லையாயின் தீண்டப்பட்ட வர்க்கு விஷமானது மேலும் பரவிவிடாமல் தடுப்பதற்கு துணியைக்கட்டுவது, தீண்டிய இடத்தில் மேலும் கீறுவதன் மூலம் விஷத்தை வெளியேற்றுவது ஆகிய நம்மால் முடிந்த முதலுதவிகளை செய்வோம். இவ்வனைத்தும் நம்முடைய இரக்கம் மற்றும் தயை என்பதின் வெளிப்பாடுகளேயாம்.

மாறாக ஒருவர் தன்னை பாம்பானது கடித்து விட்டதென தவறுதலாக கருதிக்கொண்டு கதறி தங்களிடம் உதவி கேட்பாரெனில் உங்களால் என்ன செய்ய முடியும்?

அஜ்ஞான – ஸர்பஷ்டனான அவரிடம் பாம்பு எங்கே தீண்டியது எனக் கேட்பின் அவர் தனது காலை காண்பித்து இதோ இங்கே என்கிறார். அவர் காண்பிக்கும் இடத்தில் பாம்பு கடித்ததன் சுவடு காணவில்லை மாறாக முள் ஒன்று லேசாக குத்தி உடைந்து நிற்கின்றது. அதை எடுத்துக்கொண்டே இதுவா என்று கேட்பின் அவ்விடத்தை பார்க்கக்கூட மறுத்து ஏதோ பெரிய காயம் ஏற்பட்டது என நினைத்துக் கொண்டு மேலும் அலறுகிறார். இப்பொழுது வா முள்தான் தைத்து இருந்தது அதை எடுத்துவிட்டேன் என நீங்கள் கூறுவதை முழுவதும் கூட கேட்காமல் இல்லை இல்லை என கத்துகின்றார்.

உண்மையில் நடந்தது என்னவெனில் அவர் நடந்து வரும் போது கீழிருந்த ஒரு முள்ளின் மீது காலை வைத்து விட்டார். ஏதோ வலி என்று அவர் கீதே பார்க்கும்போது அங்கே தண்ணீர் ரப்பர் குழாயானது கண்களில் தட்டுப்பட்டது இவருடைய மனதில் உண்டான பிராந்தியானது அந்த தண்ணீர ரப்பர் குழாயிலிருந்து பாம்மையும் பாம்பின் கடியை முள்ளிலிருந்தும் உருவாக்கி விட்டது. அதன் விளைவாக மரணபீதியும், உடல் முழுவதும் வியர்வையும் ஹ்ருதய துடிப்பும் அதிகமாகி விட்டிருந்தது. பாம்பின் தீண்டலானது உண்மையோ பொய்யோ? அப்படிதான் தீண்டப்பட்டதாக நினைக்கும் அவரைப் பொருத்தமட்டில் அது உண்மையே. இச்சூழலை நன்கு புரிந்து கொண்டு அவருக்கு ஒன்றும் அபாயமில்லை என உணர்ந்து கொண்ட நம்மால் கருணைக்கு பதில் ஆச்சர்யமும் வியப்பும் அடைய முடியுமேயன்றி உதவி புரியமுடியாது.

பிறகு எப்படி அம்மனிதருக்கு உங்களால் உதவ முடியும்? அம்மனிதருக்கு அபாயம் ஒன்றும் இல்லை எனத் தெரிந்த உடன் உங்களால் அவ்விடத்திலிருந்து அகல முடியும்.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

ஆனாலும் அம்மனிதன் துன்புருவதை காண்கின்றோமே ! ஆகவே தான் பொய்யாக அம்மனிதனால் தானாக கற்பித்துக் கொண்ட இந்த துன்பத்தையும் போக்க நினைப்பதற்கு அசாதரணமான இரக்க குணமும் தயையும் தேவைப்படுகிறது.

இப்படிப்பட்ட அசாதரணமான தயையானது நானும் ஒரு காலத்தில் இம்மனிதரைபோல் தான் இருந்தேன் இதே அனு -பவத்தையும் பெற்றிருந்தேன் என்றும் தான் சரியான ஒருவருடைய ஆசீர்வாதம் மற்றும் வழிகாட்டுதலின் வாயிலாக உண்மையை உணர்ந்து தெளிந்தும் இருப்பின் கண்டிப்பாக ஒருவருக்கு ஏற்படுகிறது. அதனால் எதிர்பார்ப்பின்றி உதவியும் செய்ய தோன்றுகிறது.

ஆகவே தான் விவேக சூடாமணியானது அஹேதுக தயாசிந்து எந்த ஒரு எதிரப்பார்ப்புமற்ற கருணைக்கடல் என்று குருவிற்கான லக்ஷணத்தை கூறுகின்றது. எனவே தன்னிடம் நீங்கள் இவ்வளவு கருணையானவராக இருக்கின்றீர்கள்? ஏன் எனக்கு கற்பிக்க வேண்டும். அப்படியென்ன நான் உங்களுக்கு செய்து விட்டேன்? கேட்கும் சிஷ்யனை பார்த்து குருவானவர் நான் உனக்கு ஏன் கற்பிக்க கூடாது? நீ கற்பிக்கப்படும் நிலையில் இருக்கிறாய். ஆகவே நான் கற்பிக்கின்றேன் என்று கருணையுடன் மொழிகிறார்.

**போதனா முறை ( கற்பிக்கும் முறை )**

இங்கு நாம் கண்ட ப்ரச்சனையானது மற்ற ப்ரச்சனை போலல்லாமல் வேறு வடிவத்தைக்கொண்டது. மேலும் இப்பிரச்சனையே வாழ்வின் அனைத்து ப்ரச்சனைகளுக்கும் ஆதாரமானதாகவும் இருக்கின்றது. எனவே இதற்கு தீர்வுகான உதவுகின்ற கல்வியும் அதனை கற்பிக்கும் போதனாமுறையும், மற்ற கல்விமுறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகிறது. பூர்ணத்தன்மையை பிரயோஜனமாக வழங்கும் இக்கல்வி -யானதும் கற்பிக்கும் முறையும் குரு மற்றும் சிஷ்யன் என்றும் இருவரின் உன்னத உறவால் வேயப்பட்டு இருக்கின்றது. இந்த ஒப்புயர்வற்ற இந்த உறவானது ( ஸங்கமமானது ) சிஷ்யனின் அறிவில் ஞானம் என்னும் ஒளியை ஏற்றிவைக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் நம்பிக்கையையும் தகுந்த கால அவகாசத்தையும் ஆதாரமாகக் கொண்ட தெரிபிஸ்ட்டுடன் (Therapist)கொண்ட உறவு போலாகும். குருவாகப் பட்டவரோ (Super Therapist) சூபர் தெரபிஸ்ட் போலாவார்.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

நாம் ஒவ்வொருவரும் தம்மைப் பற்றின சுயமதிப்பீட்டை கொண்டு இருக்கின்றோம். இந்த நம்மைப்பற்றின நம் மதிப்பீடானது ஓரிரண்டு நாட்களில் ஏற்பட்டதல்ல. வருடக் கணக்கான நம் அநுபவங்களின் வாயிலாகவும் நம்பிக்கைகளின் வாயிலாகவும் நாம் ஏற்படுத்திக் கொண்டது. ஆகவே இது நம்முள் மிகவும் ஆழமாகப் பதிந்துள்ள ஒரு விஷயமாகும். விந்தையென்னவெனில் நம்மை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கும், விரும்புவதற்கும் முடியாமல் இருப்பதற்கும் இதுவே ( சுய மதிப்பீடு ) முக்கிய காரணமாய் அமைந்துள்ளது என்பதே. குருவானவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ( ஸாஸ்த்ரத்தின் துணைகொண்டு ) சிஷ்யனின் மனதில் மாற்றத்தை (தெளிவை) ஏற்படுத்துகின்றார். அத்தெளிவானது தன்னைப்பற்றி தான் கொண்ட குறையுள்ளவன் என்ற சுயமதிப்பீடானது தவறானது என்றும், உண்மையில் தான் "பூர்ணமானவன் " "ஆநந்தமயமானவன்" என்றும், (உள்ளதை உள்ளபடி) காண வைக்கின்றது. ( ஏற்றுக்கொள்ள வைக்கிறது).

**சுயமதிப்பீடு:**

யாராவது ஒருவர் நம்மைப் பார்த்து காதல் வயப்பட்டு நான் உங்களை விரும்புகின்றேன் என்று கூறிவிட்டால் அளவு கடந்த மகிழ்ச்சியும், நாம் முழுமையாக வேறொருவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டோம் என்ற நம்பிக்கை உணர்வானதும் ஏற்படுகிறது. அதாவது நமது கண், காது, மூக்கு, உயரம், நிறம், தோற்றம் அனைத்தும் நம்மையன்றி இன்னொருவரால் விரும்பப்படுகின்றன என்ற சந்தோஷமானது நம்மை நாமே புதிதாக காண வைக்கிறது. அக்கணத்தில் இருந்து நம்மை நாம் ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றோம். நம் சுய மதிப்பீடு நம்மில் உயர்ந்ததாக மாறுகிறது. அடுத்தவர்களின் அபிப்ராயம் என்ற கண்களின் மூலம் நம்மை நாம் ஏற்றுக்கொள்வதும், விரும்புவதும் அதனால் விளைந்த சுயமதிப்பீடும் உண்மை -யானதல்ல. ஆகவேதான் இருவருள்ளும் அடுத்தவரின் அபிப்ராயங்களின் காரணமாக உண்டான அன்பும் மகிழ்ச்சியும் தாற்காலிகமானதாகிவிடுகிறது.

பிற்காலத்தில் காதலர்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளபுரிந்து கொள்ள இருவரிடையேயும் குறைகளானது கண்டுபிடிக்கப்பட்டு, பிரச்சனைகள் பூதாகரமாய் வடிவெடுக்கின்றன. நீ அப்படி இருந்தால், இப்படி இருந்திருந்தால்... என எதிர்பார்ப்புகள் கூட ஆரம்பிக்கின்றன. கடைசியில் நான் உன்னை விரும்புகின்றேன்தான் ஆனாலும்,



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

என்று உறவுகளில் இழுபறியானது ஆரம்பித்து விடுகின்றன. அடுத்தவர்களின் அபிப்ராயம் எனும் கண்கொண்டு என்னை நான் மதிப்பீடு செய்ததன் விளைவுதான் இது. என்னை நான் முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கும் விரும்புவதற்கும் எனக்குத் தேவை தெளிவு என்கின்ற எண்கண்கள்தான் என்பதை உணராத வரைக்கும் அடுத்தவரின் கண்களில் (அபிப்ராயத்தில்) என்னைத்தேடும் இத்தேடலானது தொடரும்.

நான் உண்மையில் "குறைகளற்றவன்". பிறப்பு இறப்பு மூப்பு என்கின்ற அனைத்திற்கும் அப்பாற்பட்டவன் அவைகளுக்கு ஆதாரமானவன் சதானந்த வடிவினன் ( அளவுக்குட்பட்ட சுக துக்கங்களுக்கும் அப்பாற்பட்டவன் ) என்பதே அறிவில் தெளிவு என்று கூறப்படுகிறது. இத் தெளிவை உண்டாக்குபவர் "குரு". இத் தெளிவானது நம்மை அன்பின் ஸ்வரூபமாகவும் அதற்கு இருப்பிடமாகவும் மாற்றுகிறது. இதுவே ஜீவன் முக்தநிலை –யென்றும் கூறப்படுகிறது. இவை யாவும் குரு மற்றும் சிஷ்யன் என்கின்ற உன்னத உறவினால் விளைந்த ஒப்பற்ற பழங்கள் தாம். ஆகவேதான் ஸாஸ்த்ரங்களிலும் பரம்பரைகளிலும் ( குருவழி வந்த சிஷ்ய வம்ஸத்தினர்கள்) "குருவானவர்" போற்றப் படுவதையும் சிறந்தமுறையில் வழிபடப்படுவதையும் காண முடிகிறது.

> தானேஆம் நன்னிலையைத் தந்த அருள் ஆனந்த
> வானே மனாதீத வாழ்வே பராபரமே.
>
> – தாயுமானவர்

> தந்யோபிஹம் தந்யோஹம் த்ருப்தேர் மே கோபமோ – பவல்லோகே
> தந்யோஹம் தந்யோபிஹம் தந்யோ தந்ய: பந: பநர்தந்யம்
> அவேஹா ஸாஸ்த்ரமஹோ ஸாஸ்த்ரமஹோ குருஹோ குரு:
> அஹோ ஜ்ஞாநமஹோ ஜ்ஞாநமஹோ சுகமஹோ சுகம்
>
> – பஞ்சதஸீ

> என்னபுண் ணியமோ செய்தேன் ஏது பாக்கியமோ காணேன்,
> நன்னிலத் தனிலெழுந்த நாரணன் கிருபையாலே,
> தந்நிய னானே னானுத் தரீயத்தை வீசு கின்றேன்,
> தந்நிய னின்னு நானே தாண்டவமாகி கின்றேன்.
>
> – கைவல்ய நவநீதம்

ஆக இந்த "குருபூர்ணிமா" நன்னாளானது ஆன்ம சாதகர்களுக்கும் சிஷ்யகோடிகளுக்கும் மிகவும் முக்கியமான நாளாகும்.



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission

ஸாதஸிவ ஸமாரம்பாம் ஸங்கராசார்ய மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்

என்றபடி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியில் ஆரம்பித்து, வ்யாஸர், ஸங்கரர் முதலானோரை நடுவில் கொண்டு, இன்று நமக்கு பேரருள் செய்த (ஞானம் புகட்டிய) குரு வரைக்குமான இக்குரு பரம்பரையை ஞானமே வடிவமாக விளங்கும் சாக்ஷாத் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாகவே உணர்ந்து, (பாவித்து) பூஜித்து வழிபடுகிறோம்.

காலமொடு தேசவர்த்த மானம் ஆதி
கலந்து நின்ற நிலைவாழி, கருணைவாழி,
மால் அறவும் சைவமுதல் மதங்கள் ஆகி
மதாதீதம் ஆன அருள் மரபு வாழி,
ஜாலமிகும் எளியேன் இவ் வழக்குப் பேசத்
தயவு வைத்து வளர்த்த அருள் தன்மைவாழி
ஆல் அடியின் பரமகுரு வாழி, வாழி,
அகண்டிதா கார அருள் அடியார் வாழி.

– தாயுமானவர்

*ஓம் தத் ஸத்*



AVVF Copyrights reserved and no part shall be reproduced without permission